**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**
**TIRUVANNAMALAI.**
**S.C. No.40/2013**

**10.04.2026 அ.சா. 16 நாகராஜன் த/பெ. சுப்பிரமணி**

A1 to 3 present.

Witness examined in accordance with High court of Madras video conferencing Rules 2020.

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இறந்த வெங்கேடேசனை முதன் முதலில் பரிசோதனை செய்த காட்டாம்பூண்டி ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர் ஹரிஹரன் என்னிடம் கொடுத்த வாக்குமூலத்தில் தன்னை 3 தெரிந்த நபர்கள் செங்கல், கருங்கல் மற்றும் கைகளால் தாக்கியதாக கூறவில்லை என்றால் சரிதான். சாட்சி தனலட்சுமியின் வாக்குமூலத்தை நான் சம்பவம் நடந்து ஒரு மாதத்திற்கு பின்தான் பதிவு செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். மேற்படி சாட்சி ஒரு துக்க நிகழ்ச்சிக்கு சென்றிருந்ததால் காலத்தாமதம் ஏற்பட்டிருந்து என்று சொன்னார். விபத்து பதிவேட்டு நகலில் மருத்துவர் எந்த தேதியில் எந்த இடத்தில் எத்தனை மணிக்கு தாக்கப்பட்டார் என்ற விவரம் எழுதவில்லை என்று சொன்னால் இடம் மட்டும் குறிப்பிடவில்லை. மற்ற விவரங்களை குறிப்பிட்டுள்ளார். விபத்து பதிவேட்டு நகலில் மருத்துவர் சம்பவ தேதியையும், சம்பவம் நடந்த நேரத்தையும் குறிப்பிட்டு எழுதவில்லை என்றும், நான் உண்மைக்கு புறம்பாக சாட்சி அளிக்கிறேன் என்றால் தவறு. விபத்து பதிவேட்டு நகலில் மருத்துவர் கருங்கல் ஜல்லியால் தாக்கியதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். விபத்து பதிவேட்டில் வெளிப்புற காயங்கள் எதுவும் இல்லை என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தயார் செய்த பிரேத விசாரணை அறிக்கையில் Column 7– ல் இறந்த நபரின் உடலின் மீது 4 வெளிப்புற காயங்கள் இருந்ததாக எழுதியுள்ளேன் என்றால் சரிதான். 13.06.2012 மதியம் 2.35 மணிக்கு அன்று விபத்து பதிவேட்டு நகலில் வெளிக்காயங்கள் எதுவும் இல்லை என்று மருத்துவரால் குறிப்பிட்டு எழுதப்பட்டிருக்கும் நிலையில் நான் மறுநாள் காலை 8.00 மணிக்கு பிரேத விசாரணை அறிக்கையில் மேற்படி காயங்கள் இருந்ததாக தவறாக எழுதியுள்ளேன் என்றால் சரியல்ல. இது குறித்து நான் மருத்துவரிடம்

விசாரணை செய்தேனா என்றால் விசாரித்தேன். நான் அவ்வாறு விசாரித்ததற்காக ஆதாரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் கேள்விகளை தொகுத்து அவரிடம் பதில் பெற்றேன். அதை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அதை பற்றி தெரியவில்லை. நான் இறுதி அறிக்கையுடன் அதை தாக்கல் செய்யவில்லை என்றும் வழக்கிற்காக தற்போது பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து பதிவேட்டில் Brought Dead என்று எழுதியுள்ளார் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த பிரேத விசாரணை அறிக்கையில் Column No.4 –ல் 13.06.2012 அன்று இறந்ததாக சொல்லப்படும் வெங்கடேசன் 14.06.2012 அன்று மன்னார்பாளையத்தில் அவரது அண்ணன் ரமேசுடன் கடைசியாக பேசிக்கொண்டிருந்தார் என்று நான் எழுதியுள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த பிரேத விசாரணை அறிக்கையில் Column No.9–ல் சொல்லப்பட்ட இறந்த வெங்கடேசனின் கள்ளக்காதலி என்று சொல்லப்படும் அம்முவை விசாரணை செய்தேனா என்றால் விசாரிக்கவில்லை. நான் பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்த பின்பு நான் சம்பவ இடத்திற்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் பிரேத அறிக்கை தயார் செய்வற்கு முன்பே காலை 7.00 மணிக்கு சம்பவ இடம் சென்றேன். நான் தயார் செய்த பார்வை மகசர் எத்தணை மணிக்கு தயார் செய்தேன் என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. பார்வை மகசர் சாட்சிகளின் வாக்குமூலங்களிலும் நான் சம்பவ இடத்தை பார்வையிட்டு எத்தனை மணிக்கு பார்வை மகசர் தயார் செய்த விவரம், இடம் பெறவில்லை என்றால் சரிதான். திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில் இருந்து காவல் நிலையத்திற்கு வந்த இன்டிமேஷன் புக்கை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில் இருந்து வந்த தகவலுக்கும் முதல் தகவல் அறிக்கைக்கும் இடையே முரண்பாடுகள் இருந்ததால்தான் நான் அதை மறைத்துவிட்டேன் என்றால் சரியல்ல. காவல் துறை நிலைஆணை முரணாக என்னுடைய விசாரணை அமைந்துள்ளது என்றால் சரியல்ல. எதிரிகள் 1,2 ஆகியோரது ஒப்பதல் வாக்குமூலங்கள் ஒரே நபராலும், 3 வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம் வேறொரு நபரால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதில் உள்ள எழுத்துக்கள் வெவ்வேறாக உள்ளது என்றால் சரியல்ல. கையெழுத்துக்கள் வெவ்வேறாக உள்ளது என்றும் நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால்

சரியல்ல. 1வது எதிரியின் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் இடம் இடைச்செறுகலாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகசரில் Column No. 6ல் ஜல்லி என்று பின்னிட்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 2வது எதிரியின் கைப்பற்றுதல் மகசரில் " சுட்ட" என்ற வார்த்தை பின்னிட்டு இடைச்செறுகலாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

( சாட்சியை மேற்கொண்டு காணொளி மூலம் விசாரிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததல்ல என்று எதிரி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்தற்கிணங்க குறுக்கு விசாரணை இத்துடன் நிறுத்தப்பட்டது)

| Court site coordinator | Deponent | Remote site coordinator |
|---|---|---|
| Tmt.V. Varalakshmi<br>Bench Clerk Gr.1 | S. Nagarajan | T. Parthasarathy<br>System Analyst, District Court , Tirupathur |

**Court site coordinator** **Deponent** **Remote site coordinator**

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.